RECEIVED 16 PERIODICALS


சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு

மெக்கானிக்ஸ் (Mechanics)
எலெக்ரீசியன்ஸ் (Electricians)
வெல்டர்ஸ் (Welders)
ஹவுஸ்மெயிட்ஸ் (HouseMaids)

நான்கு வருட அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்
அனுபவமுள்ளவர்களின் போட்டோ ஸ்டாற் பிரதிகளும் இரண்டு புகைப்படங்களுடன் விண்ணப்பிக்கவும்.

குட்வில் (T) ரவல்
N 635 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.



பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No' QB/8945/78

மலர்! 21 ஆனி: 2 றஜப்! 20 இதழ்! 117
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 16-6-79



'மில்க்வைற் செய்தி' இதழ் 42''

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 பார்சோப் அல்லது 2 நீம் சோப் அல்லது 2 சலவைப்பவுடர் மேலுறைகளை அனுப்பி மேற்படி புதிய செய்தி இதழ் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்


# மூடப்பட்ட வங்கிக் கிளைகள்

# விரைவில் திறக்கப்படும்

யாழ். மாவட்ட அமைச்சர் நடவடிக்கை

## கறுப்புப்பட்டி போராட்டம் பூரண வெற்றி!

### சாவகச்சேரி நவம் பெருமிதம்

[யாழ்ப்பாணம்]

'தமிழ் மக்கள் மத்தியில் தீராத பிரச்னையாக வளர்ந்து வரும் சமூகக் குறைபாடுகளையும், சமூக அடிப்படையில் ஏற்படும் கலவரங்களையும் பூரணமாக அகற்றும் நோக்குடன் இயக்கத்தோடு இப்பிரச்னைகளுக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற இலட்சியத்துடன் அறவழிப் போராட்டக்குழு நேற்று நடாத்திய கறுப்புப் போராட்டம் யாழ் குடாநாட்டிலும், விசேடமாக சாவகச்சேரித் தொகுதியிலும் பூரண வெற்றி பெற்றுள்ளது.

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவரது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

தொடர்ந்தும் இப்பிரச்னைகளை அன்பு வழியிலே, அகிம்சை வழியிலே தீர்ப்பதற்குத் திடசங்கற்பம் கொண்டு தமிழ் மக்கள் மத்தியிலே உண்மையான மனமாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமே இதற்கு நிரந்தர தீர்வுகாண முடியும் என்ற நம்பிக்கையோடு அறவழிப் போராட்டக்குழுவினர் இயங்குகிறார்கள். இவர்களின் பெருமுயற்சி வெற்றிபெற எனது ஒத்துழைப்பும் ஆதரவும் என்றும் நிச்சயமாக இருக்கும்.

சமூகக் குறைபாடுகளினால் ஏற்படும் தாக்கங்களையும் அதனால் எமது இனத்தின் விடுதலைப் பாதைக்கு ஏற்படும் கஷ்டங்களையும் தமிழ் மக்கள் மத்தியிலும் விசேடமாக வளரும் சந்ததியினரிடையேயும் பூரண விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் நோக்குடன் இவர்கள் தொடரும் பணி நிச்சயமாக வெற்றிபெற வேண்டும்.

## யாழ் மாநகர, வல்வை நகர சபைகளில் கறுப்புக்கொடி

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரி அறவழிப் போராட்டக் குழுவின் கறுப்புப்பட்டி இயக்கத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ் மாநகர சபை முன்றலிலும், வல்வெட்டித்துறை நகரசபையிலும் கறுப்புக்கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன.

அதேவேளையில சாவகச்சேரி, பருத்தித்துறை நகர சபைகளில் கறுப்புக்கொடிகள் ஏற்றப்படவில்லை.

குடாநாட்டின்பலசந்திகளிலும் ''சாதிமுறையைத் தகர்ப்போம். தமிழர் ஒற்றுமையை வளர்ப்போம்'' என்று கூறும் வாசகங்கள் அடங்கிய 'பனர்'கள் கட்டப்பட்டு கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

யாழ்நகரிலுள்ள சகல வர்த்தக நிறுவனங்களிலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. பல இடங்களில் பொது ஸ்தாபனங்களிலும் சில வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

பாடசாலை மாணவர்கள் பொதுப்பிரமுகர்கள், தொண்டர்கள், அரசாங்க, தனியார் ஆண் பெண் ஊழியர்கள் கறுப்புப்பட்டி அணிந்திருந்தமை காணக்கூடியதாயிருந்தது.

யாழ். நகரிலுள்ள சகல சிலைகளிலும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன. (செ)

## பாடசாலைகளில் சாதிப் பாகுபாடு காட்டினால் கடும் தண்டனை

[தெல்லிப்பழை]

வடபகுதிக் கல்லூரிகளில் கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் பாடசாலைகளில் சாதிப் பாகுபாட்டை ஏற்படுத்தும் வகையில் நடந்தால் கல்வி அமைச்சு தண்டனை வழங்கவுள்ளது.

கல்வி அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் திரு சரத் பெரேரா இதற்கான சுற்று நிருபம் ஒன்றினை சகல கல்வி

[6-ம் பக்கம் பார்க்க]

## மக்கள் கஷ்டங்களை மன்சூர் நேரில் பார்வையிட்டார்

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில் நடைபெற்ற வங்கிக் கொள்ளைகளை அடுத்து மூடப்பட்டிருந்த வங்கிக் கிளைகள் மீண்டும் விரைவில் திறக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை யாழ் மாவட்ட அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். எம். மன்சூர் மேற்கொண்டு வருகின்றார்.

வடபகுதியில் வங்கிகள் மூடப்பட்டதனால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களை நேரில் அவதானித்த பின்னரே மாவட்ட அமைச்சர் கடந்த ஆறுமாதங்களாக மூடப்பட்டுள்ள வங்கிகளை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

மக்கள் வங்கியினதும் இலங்கை வங்கியினதும் வடபிரதேச உயர் அதிகாரிகளுடன் வங்கிகளை மீண்டும் திறப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து தாம் ஆராய்ந்துள்ளதாகவும் விரைவில் அவற்றைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

### மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் வடபிரதேச முகாமையாளர் திரு. ஈ. நடராசா, மாவட்ட அமைச்சர் ஜனாப் மன்சூரிடம் மக்கள் வங்கிக்கிளைகளை மீண்டும் திறப்பதன் அவசியத்தை வலியுறுத்தியதுடன், ஒன்றிணைக்கப்பட்ட வங்கிகளில் மக்கள் படும் கஸ்டங்களையும் நேரில் அழைத்துச் சென்றுகாண்பித்தார். [இ]

## லயனலின் தந்தை காலமானார்

[யாழ்ப்பாணம்]

யாழ்மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றி சமீபத்தில் மாற்றலாகிச் சென்ற திரு. லயனல் பெர்னாண்டோவின் தந்தையார் திரு பெர்னாண்டோ நேற்று முன்தினம் கொழும்பில் காலமானார். அன்னாரது இறுதிச் சடங்குகள் இன்று சனிக்கிழமை கொழும்பில் நடைபெறுகிறது. சிலமாதங்களுக்கு முன்னர் திரு. லயனல் பெர்னாண்டோவின் தாயார் யாழ்ப்பாணத்தில் காலமானது தெரிந்ததே.

## 'சிவா' இன்று யாழ் வருகிறார்

### ரயில்நிலையங்களில் வரவேற்பு

[யாழ்ப்பாணம்]

அமெரிக்க விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பியுமான திரு மு சிவசிதம்பரம் இன்று நண்பகல் யாழ்ப்பாணம் வந்து சேருவார்.

இன்று காலை புகையிரதம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு வரும் சிவசிதம்பரத்துக்கு வவுனியாவிலிருந்து சகல புகையிரத நிலையங்களிலும் வரவேற்பளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, நண்பகல் யாழ் புகையிரத நிலையத்தை வந்தடையும் அவரை

[6ம் பக்கம் பார்க்க]

## புதருக்குள்ளிருந்து ஓடிய 3ம் எதிரியை மடக்கிப் பிடித்தேன்

### செங்கலடி வங்கிக்கொள்ளை வழக்கில் சார்ஜன்ட் றெட்றிக்கோ சாட்சியம்

[கொழும்பு]

புதருக்குள்ளிருந்து ஓடிய மூன்றாம் எதிரியை மடக்கிப் பிடித்ததாக செங்கலடி வங்கிக் கொள்ளை வழக்கில் சாட்சியமளித்த சார்ஜன்ட் றெட்றிகோ கூறினார்.

செங்கலடி கிராமிய வங்கிக் கொள்ளை வழக்கு கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சார்ஜன்ட் றெட்றிகோ சாட்சியமளித்தார்.

சார்ஜன்ட் றெட்றிகோ தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:

ஆயுதங்களுடன் ஆன்டின் கார் ஒன்றில் சார்ஜன்ட் ஹசன். உபாலி ஆகியவர்களுடன் சென்றேன். நான் யந்திரத் துப்பாக்கியுடன் 25 தோட்டாக்கள் கொண்டு சென்றேன் தோட்டாக்கள் எல்லாம் தீர்க்கப்பட்டு விட்டன. 1-ம் 2-ம் எதிரிகள் பிடிபட்டபின்னர் நானும் உபாலியும் காருக்கு காவல் இருக்கும்படி பணிக்கப்பட்டோம். 5-45 மணியளவில் சொலமன் வந்தார். உபாலி - சொலமன் பொறுப்பில் காரை விட்டு விட்டு நான் வேறு சிலருடன் சாரதியைத் தேடி காட்டுக்குள் போனேன் அரைமைல் தூரம் சென்றபின், புதருக்குள்ளிருந்து நீலக்காட்சட்டை அணிந்த ஒருவர் ஓடுவதைக் கண்டோம், நான் அவரை மடக்கிப் பிடித்தேன் மற்றவர்கள் எனக்கு உதவி புரிந்தார்கள். பலாத்காரமும் பிரயோகிக்கப்பட்டது, பிடிபட்டவர் தான் மூன்றாவது எதிரியாவார் பிறகு காரை சொலமன் பொறுப்பிலிருந்து எதிரியுடன் பொலிஸ் நிலையம் வந்தோம்.

வங்கி முகாமையாளர் திரு. தர்மகுலசிங்கம் சாட்சியமளிக்கையில், முறேஸ்கணேசலிங்கம் ஆகியவர்களையே நான் அடையாளம் காட்டினேன், விஜயமூர்த்தியைக் காணவில்லை, பொலிசாருக்குக்காட்டிக் கொடுக்கவில்லை என்றார்.

கார்சாரதி செல்லத்துரை செல்வநாயகம் சாட்சியமளிக்கையில் ஏறாவூர் வங்கியில் கொள்ளையடிக்கப் போகிறோம் காரைத் தரவும், கொள்ளையடிக்கும் பணத்தில் ஒருபகு

[6-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## தேவை

சிங்கப்பூரில் சமையல், வீட்டு வேலைகள் புரிவதற்கு பெண்கள் உடன் தேவை. நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் கல்வி அறிவு உள்ளவர்களாகவும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும் மேலும் விபரங்களுக்கு: 28, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்பு கொள்ளவும். 2751

க. பொ. த. ப. சாதாரண, உயர்தர, கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகளுக்குப் போதிக்க ஆசிரியர்கள் தேவை தகைமை விபரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். கலைமகள் கல்வி நிலையம், கண்டிவீதி, கிளிநொச்சி. 2723

## விற்பனைக்கு

கிளிநொச்சி பிரதான வீதியில் எவ்வித வியாபாரமும் செய்வதற்கு உகந்த கடை தளபாடச் சாமான்களுடன் உடன் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: C. நடராசா. 302, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் 2730

9 சிறி தொடர் இலக்கமுடைய மொரிஸ் மைனர் கார் உடனடியாக விற்பனைக்குண்டு சனிக்கிழமை மாலையிலும் ஞாயிற்றுக்கிழமை காலையிலும் பார்வையிடலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 44/1, யாழ் வீதி, யாழ்ப்பாணம் 2766

இரண்டு கடைச்சல் பட்டடைகளும் ஒரு மின்சார ஒட்டும் இயந்திரமும் உடனடியாக விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: ஞாயிற்றுக்கிழமை 17-06-79 பகல் 12 மணிக்கு முன் தொடர்பு கொள்ளவும் 151, காங்கேசன்துறை வீதி, கிரியலை. 2764

யாழ்நகர எல்லைக்குள் ஓர் ஸ்ருடியோ விற்பனைக்கு அல்லது கொமிஷனுக்கு உடனடியாக கொடுக்கப்பட இருக்கிறது. விபரங்கட்கு: கடிதமூலம் தொடர்பு கொள்க விளம்பர இல 2767. C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம் 2767

6 ஸ்ரீ தொடர்பிலக்கம் பெற்ற ஸ்கூட்டர் இத்தாலி DL விற்பனைக்குண்டு விபரங்களுக்கு; பவள கிருஷ்ணா ஜுவல் ஹவுஸ், 200, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 2771

## பயிற்சி

மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா விசேட 3 மாத பயிற்சி 10-07-1979 ஆரம்பமாகவுள்ளது இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11/B, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 2736

## WANTED

"Wanted an Audit Clerk Trainee with full knowledge in Book-keeping & Accounts Preference will be given for those living within the limits of the Municipality Apply with two recent testimonials stating salary required". Advt No 2749. C/o Eelanadu Ltd., Jaffna. 2749

## விற்பனைக்கு

4-ம் குறுக்குத் தெருவில் சின்னக்கடை மார்க்கட்டுக்கு முன் 70, 72, இலக்கம் கொண்ட இரண்டு கடைகள் உடனே விற்பனைக்கு உண்டு திருமதி ஞானேந்திரன், 68 சின்னக்கடை, யாழ்ப்பாணம் 2776

## பயிற்சி

Transistor ரேடியோ பயிற்சி ஆரம்பத்திலிருந்து அளிக்கப்படும். ரேடியோவைப் பற்றி எதுவுமே தெரிந்திருக்கத் தேவையில்லை விபரங்களுக்கு: National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம் 2752

## வாடகைக்கு

ஓட்டுமடம் சந்தி. ஐந்து சந்திக்கு இடையில் மானிப்பாய் ரோட்டில் வீடு வாடகைக்குண்டு. விபரங்களுக்கு சாயி இல்லம், 159, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் 2775

## வகுப்புகள்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பைத் தேடிக்கொள்ள 8-ம் வகுப்பு, G C E [O/L] சித்தியடைந்தவர்கட்கு ஓர் அரிய வாய்ப்பு. Theory & Practicals of Television in brief (6 months) Principle of Electricity (6 months), Theory & Practicals of Radio & Electronics (6 months ஆகிய வகுப்புகள் கொழும்பில் வகுப்புகளை நடாத்தி அனுபவம் பெற்ற விரிவுரையாளர்களால் நடாத்தப்படவுள்ளன. விரும்புவோர் அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, என்ற முகவரியுடன் 28-6-79க்கு முன் தொடர்பு கொள்க. குறிப்பு செயல் முறைக்கு நவீன உபகரணங்களுடன் கூடிய ஆய்வுகூட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. 2765

### அறிவித்தல்

'டுவிஸ்ட்' நடன அதிர்ஷ்ட லாபச் சீட்டு 23-ந் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

2763 நிர்வாகி.

## கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் வேலைகளைச் செய்து முடிப்பதற்காக ரூபா 50 000/-க்கும் கூடுதலாகவும் தம்மைப் பதிவு செய்துகொண்டுள்ள பதிவுபெற்ற நிறுவனங்கள், ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விவிண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

"பாஷையூர் துறைமுகம், படகுக் கால்வாய் ஆகிய வற்றை ஆழமாக்கல்"

இத்தகைய வேலைகளில் முன் அனுபவம்பெற்றஒப்பந்தகாரர்களுக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்

கேள்விப்பத்திரங்கள் 1979 ஜூன் 22-ந் திகதி பிற்பகல் 4-00 மணி வரை வழங்கப்பட்டு 27-6-79 முற்பகல் 11-00 மணியுடன் கேள்விகள் ஏற்றுக்கொள்ளுதல் முடிவடையும்.

மேலும் விபரங்கள் தேவைப்படின் யாழ்ப்பாணம், நெடுஞ்சாலைகள், நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து காரியாலய நேரங்களில் அறிந்துகொள்ளலாம்

ஒப்பம்

எஸ். கணேசரட்னம்,
பிரதம பொறியியலாளர்,
(நெடுஞ்சாலைகள்)
யாழ்ப்பாணம்.

13 ஜூன் 1979. 2773

## கேள்வி விளம்பரம்

மானிப்பாய் கிராம சபை விசேட ஆணையாளரால் மானிப்பாய் கிராம சபை வாசிகசாலைக் கட்டிடம் அமைத்தல் வேலைக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணப் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பெற்ற ஒப்பந்தகாரரிடம் இருந்து 1979-06-28-ஆம் திகதி காலை 10 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் ஒவ்வொன்றுக்கும் ருபா 100/- கேள்விக் கட்டுப்பணமாகவும் கேள்விப்பத்திரக் கிரயமாக ருபா 10/-ம் செலுத்தி 1979-06-26 ஆம் திகதி மாலை 3 00 மணிவரை மானிப்பாய் கிராம சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை இச் சபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளவும்.

அ. கி. செபநாயகம்
விசேட ஆணையாளர்,
மானிப்பாய்க் கிராம சபை
மானிப்பாய்க்
கிராமசபை அலுவலகம்,
ஆனைக்கோட்டை,
14-06-79.

2774

## முருங்கன் களிமண் வயலிலிருந்து காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை வேலைத்தலத்திற்கு தினமும் 150 தொன் களிமண்ணை ஏற்றுதல், போக்குவரத்து, விநியோகம் செய்வதற்கான கேள்வி விண்ணப்பம் கோரல்

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை வேலைத்தல வேலைகொள் முகாமையாளரால் மேற்குறிப்பிடப்பட்ட சேவைகளுக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கமைய வரவேற்கப்படுகின்றன.

(அ) கேள்விகளில் விருப்புடையோர் குறிப்பிட்ட சேவைக்குரிய தங்கள் விண்ணப்பங்களை வேலைகொள் முகாமையாளர், காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை வேலைத்தலம், காங்கேசன்துறை என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். அவ்விண்ணப்பங்களுடன் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபாய் ஐம்பது செலுத்தப்படவேண்டும்.

(ஆ) கேள்வி விண்ணப்பப் படிவங்கள் 1979 ஜூன் 18-ந் திகதி முதல் 1979 ஜூன் 22-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை விநியோகிக்கப்படும்.

(இ) கேள்வி விண்ணப்பங்களுக்கான முடிவு திகதி: 1979 ஜூன் 28-ந் திகதி பகல் 2-00 மணி.

வேலைகொள் முகாமையாளர்
காங்கேசன் சிமெந்து
தொழிற்சாலை,
காங்கேசன்துறை.
13-06-79 2769

## தோப்பு சன சமூக நிலைய ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தோப்பு வாலிப முன்னேற்றக் கழகத்தின் 22வது ஆண்டு நிறைவும் தோப்பு சனசமூகநிலையத்தின் 8வது ஆண்டு விழாவும் விளையாட்டுப்போட்டியும் இன்று திரு. செ. தி. யோகநாதன் தலைமையில் நடைபெறும்.

யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு ப. ஜெகநாதன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். கோப்பாய் எம். பி திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, கலாநிதி அ. சண்முகதாஸ், வ. பொன்னம்பலம் உட்படப்பலர் உரையாற்றுவர். [கு]

## சதுரங்கப் பேராசிரியர் யாழ். விஜயம்

[யாழ்ப்பாணம்]

யூகோஸ்லாவியாவைச் சேர்ந்த சதுரங்கப் பேராசிரியர் நிக்கோலஸ் கரகிளேக் இம் மாதம் 18-ந் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

யாழ். சதுரங்கக் கழகத்தின் அழைப்பின்பேரில் யாழ்ப்பாணம் வரும் பேராசிரியர் 18ம் திகதி மாலை யாழ் இந்துக் கல்லூரியிலும் 19ம் திகதி பரியோவான் கல்லூரியிலும் விரிவுரைகளும் காட்சி விளையாட்டுக்களும் நிகழ்த்துவார்.

ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கானோருடன் விளையாடவுள்ள பேராசிரியருடன் சதுரங்க விளையாட்டில் ஈடுபட விரும்புவோருக்கு சந்தர்ப்பம் விக்கப்படவுள்ளது. [கு]

## மீனாட்சி கல்யாணம்

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகர விநாயகருக்கும் அன்னை விசாலாட்சி விஸ்வநாதருக்கும் மணவாளக்கோலம். சாஸ்திர சங்காபிஷேகம், திருக்கல்யாணம் என்பன இன்று நடைபெறும்.

மீனாட்சி கல்யாணம் என்னும் பொருள்பற்றி நல்லை ஞான சம்பந்தர் ஆதீனகர்த்தா பரமாச்சாரிய சுவாமிகள் இன்னிசைவிரிவுரை நிகழ்த்துவார். மகேஸ்வர பூசையும் நடைபெறும். [கொ]

## இளைப்பாறிய அதிபர் திரு. பேராயிரவர்

ஏறக்குறைய 40 ஆண்டுகளாக மானிப்பாய் இந்துக் கல்லூரியோடு ஒன்றியிருந்த திரு. பேராயிரவர் அண்மையில் இளைப்பாறியுள்ளார். படிப்படியாக முன்னேறி வாழ் நாளில் பெரும்பகுதியைக் கல்லூரிக்காகவே செலவழித்து ஒருவர் இளைப்பாறியிருக்கிறார் அவரது முன்னேற்றத்தை எடைபோடுவதற்குக் கல்லூரியின் முன்னேற்றத்தை எடைபோட்டால் போதுமானது தன்னலம் கருதாமல் கல்லூரியின் வளர்ச்சியில் முன்னேற்றத்தில் அக்கறையோடு உழைத்து திருப்தி கண்டவர் திரு பேராயிரவர்,

காலை முதல் இரவு படுக்கைக்குப் போகும் வரை கல்லூரியே சிந்தனையாய், உழைத்த உத்தமர் திரு பேராயிரவர் இவரது ஆற்றலை வியக்காதார் இல்லை.

சிறந்த ஆசிரியரும், நல்ல அதிபராய்த் திகழ்ந்த திரு. பேராயிரவரைக் கௌரவிக்கும் முகமாக இன்று வடமாகாண அதிபர்கள் சங்கம் நண்பகல் விருந்தொன்றை நடாத்துகின்றது. இளைப்பாறிய அதிபர்களும் இதில் விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர்.

சின்னையா சிவனேசன்
(செயலாளர் வடமாகாண அதிபர்கள் சங்கம்)

## புனரமைத்து கும்பாபிஷேகம்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை செல்லப்பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகவிழா வியாழக்கிழமை சிறப்பாக நடந்தேறியது

யாத்திரைச் செல்லப்பிள்ளையார் என அழைக்கப்படும் புராதனப் பழமை வாய்ந்த இவ்வாலயம் பலகாலமாக பாழடைந்திருந்தது. அண்மையில் புதமொருகுடன் கூடியதாக புனரமைப்புச் செய்யப்பட்டு கும்பாபிஷேக விழா இடம் பேற்றது.

மாவை ஆதீனத்தைச் சேர்ந்த பிரமஸ்ரீ ஐ. வைத்தியநாதக்குருக்கள் தலைமையில் குருமார்கள் சிறப்பாக இவ்விழாவை நடத்திவைத்தனர்.

கும்பாபிஷேகத்தை அடுத்து தொடர்ந்து 12 தினங்கள் திருவிழா நடைபெறுகிறது

## மத்திய கிழக்கில் வேலைவாய்ப்பு

ஐக்கிய அரபு இராஜியத்தில் அங்கம் வகிக்கும் துபாய் இராஜியத்தில் நீண்டகாலமாக இயங்கும் பிரபலமான வாகனப் போக்குவரத்து நிலையத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு எம்மால் பின்வரும் வேலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

Automobile Foreman, Automobile Mechniacs, Automobile Electricians, Dentor Painter Mechanic helper, Polisher, Receptionist, Cashier/Accountant

மேலும் துபாயில் உள்ள பிறிதொரு வர்த்தக நிலையத்துக்கு பின்வரும் பணியாளர்களுக்கான வெற்றிடங்கள் உள:

பணிப்பெண்கள், பெண் சமையல்காரர்கள், பெண் தாதிமார்கள், பெண் செயலாளர்கள், பெண் தட்டச்சு/சுருக்கெழுத்தாளர்கள், பெண் தையல்காரர்கள்.

### சகல பதவிகளுக்கும் ஆங்கில அறிவு மிகவும் அவசியம்

- தகுதியுள்ளவர்கள் 3 பாஸ்போட் சைஸ் புகைப்படங்களுடன் கல்வித்தகைமை, வேலை அனுபவம், நற்சான்றிதழ்கள் மற்றும் இதர தஸ்தாவேஜுகளின் போட்டோஸ்டாட் பிரதிகளுடன் எதிர்வரும் 22-ந் திகதிக்கு முன்னர் சாதாரணத் தபாலில் ஆங்கிலத்தில் விண்ணப்பிக்கவும்.
- ஏற்கனவே எம்மோடு பதிவு செய்துகொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை
- தகுதியுள்ளவர்கள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு எந்தவிதமான அறிவித்தலும் வழங்கப்படமாட்டாது
- நேரில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிச்சயம் ஏற்கப்படமாட்டாது

JEYA TRAVEL AGENCY
P. o Box 88, Jaffna

Labour Licence No. 135. 2761

# "முன்காரில் சென்றவர்கள் சுட்டதால் நாங்களும்பின்னர் திருப்பிச்சுட்டோம்"

## செங்கலடி கொள்ளை வழக்கில் பொலிசார் தொடர்ந்து சாட்சியம்

(கொழும்பு)

செங்கலடி இராமியவங்கி கொள்ளை வழக்கு நேற்று முன் தினம் தொடர்ந்து விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரிகள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி திரு. எம். சிவசிதம்பரம் ஏறாவூர் பொலிஸ்நிலைய கான்ஸ்டபிள் திரு. அபேரத்தினவை தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்தார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. எல் எச். த அல்விஸ் முன்னிலையில் நடைபெறும் இவ்வழக்கு விசாரணையில் சட்டத்தரணி திரு. சிவசிதம்பரத்தின் கேள்விகளுக்கு சாட்சி அளித்த பதில்கள் வருமாறு:-

சட்: கொழும்பில் இப்போது எங்கு தங்கியிருக்கிறீர்?

கோட்டை பொலிஸ்நிலையத்தில் எனது நண்பருடன்.

சட்: இராமநாயக்க? அவர் தனது நண்பர் ஒருவருடன்.

சட்: நேற்று இங்கு சாட்சியமளித்தபின் இராமநாயக்காவுடன் பேசினீரா? இங்கு காலையில் கண்டேன்: பேசவில்லை

சட்: முதலாம் எதிரி கணேசலிங்கத்தை தள்ளிவீழ்த்தியதை இராமநாயக்க காணாதபடியால்தான் அவரைக் கூப்பிட்டீர்? ஆம்.

சட்: அதற்கு முதல் கணேசலிங்கத்தை நோக்கி முதலாம் எதிரி பிஸ்டலை நீட்டியதை பொலிஸ் வாக்குமூலத்தில் கூறினீரா? கூறியிருப்பேன் என்றே நினைக்கிறேன்.

சட்: பிஸ்டலை முதலாம் எதிரி நீட்டியதாக ஒருவார்த்தை கூட நீர் கூறவில்லை?

சாட்சி: தள்ளிவிழுத்திய பின் தான் அவர் பிஸ்டல் வைத்திருந்ததைக் கண்டேன்.

சட்: பலதடவை இங்கு, தள்ளிவிழ்த்த முன் பிஸ்டலை நீட்டியதாக கூறியிருக்கிறீர்? பொலிசாரிடமும் கூறியிருப்பேன் என்றே நினைக்கிறேன்.

சட்: முதலாம் எதிரி கணேசலிங்கத்தை அவர் வீதியின் இடது ஓரம் சென்றுகொண்டிருந்தபோதுதான் தள்ளி வீழ்த்தினார்?-ஆம்.

சட்: முதலாம் எதிரியும் இடதுபக்கமாகவே சென்றுகொண்டிருந்தார்:-ஆம்.

சட்:- கணேசலிங்கத்தை தள்ளுவதற்கு விநாயகமூர்த்தியைத் தாண்டிச்செல்லவேண்டியதில்லை?-நான் தள்ளியதைத் தான் கண்டேன்.

சட்: இங்கு நீர் கூறியபடி கணேசலிங்கத்தை தள்ளுவதற்கு விநாயகமூர்த்தியைத் தாண்டி செல்ல வேண்டியதில்லை?-ஆம்,

சட்: முதலாம் எதிரி காரில் ஏறுவதற்கு காரைச்சுற்றி சென்றாரா? இல்லை.

சட்: காரின் வலதுபுறமாக ஏறுவதற்கு அப்படி சுற்றிச்செல்வதற்கு அவசியமில்லை?-ஆம்.

சட்: சம்பவம் நடந்த இடத்திலிருந்து பார்த்தால் சாந்தி ஹோட்டல் தெரியும் என்று கூறினீர்?- ஆம்.

சட்: அச்சமயம் சாந்தி ஹோட்டல் தெரியும் என்று கூறினீர்?-ஆம்.

சட்: அச்சமயம் சாந்தி ஹோட்டலின்முன் 404 கார், நின்றதைக் கண்டீரா?-இல்லை.

சட்; ஆகவே 404 கார், பியட்கார் சென்றபின்னர் தான் வந்தது?

அரசுசட்: நான் இவ்வினாவை ஆட்சேபிக்கிறேன்

(இக் கூட்டத்தில் யூரிசபையினர் வெளியே செல்லுமாறு கேட்கப்பட்டனர் சட்டவாதத்தின்பின் மீண்டும் விசாரணை தொடர்ந்தது)

சட்: ஆகவே 404 கார், பியட்கார் சென்றபின்னரே வந்தது?

சட்: 404 காரை முதல் தடவையாக எப்போது கண்டீர்! -கொள்ளை நடந்தபின் நாம் காரைத் தேடியபோது தான் கண்டேன்.

சட்: சாந்தி ஹோட்டல் ஒரு மதுபானச் சாலை?- ஆம்

சட்: நீர் போன போது அங்கு பொலிசார் மதுபானம் அருந்திக்கொண்டிருந்தனரா? - இல்லை. இடையில் ஒரு சுவர் இருந்ததால் உள்ளே இருப்பவர்களைத் தெரியாது.

சட்; அச்சுவர் எவ்வளவு உயரமிருக்கும்? 3, 4 அடி உயரமிருக்கும்

சட்: ஆகவே எவரும் அதனூடு பார்க்கலாம் தானே?- வெளியில் நின்று பார்த்தால் தெரியாது.

சட்: இரகசியப் பொலிசாரும் இக்கொள்ளை தொடர்பாகத்தான் அங்கு வந்தார்களா?-தெரியாது.

சட்: இன்றுவரை தெரியாதா? இல்லை.

சட்: சார்ஜன்ட் 4 நிமிடங்களின்பின் வந்தபோது, பியட் காரை காணக்கூடியதாக இருந்தது?-ஆம்

சட்: எவ்வளவு தூரத்தில் அக்கார் சென்றுகொண்டிருந்தது?- சாந்திதியேட்டரைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்தது.

சாட்சி தொடர்ந்து கூறியதாவது:-

சாந்தி ஹோட்டலிலிருந்து பரளை வீதி 300 யார் தூரத்தில் இருக்கிறது.

இரகசியப் பொலிசாருடன் நான் கதைத்துக்கொண்டிருந்தபோது கார் ஏறாவூர் வாழைச்சேனை வீதியில் செல்வதைக் கண்டேன். மக்கள் வீதியில் நின்றதால்பின்னர் தெளிவாகப் பார்க்கமுடியவில்லை. மக்கள் பதட்டமாக நின்றார்கள் அவர்களிடம் இவ்வழியாக இரு கார்கள் வந்ததா? என்று கேட்டோம் அவர்கள் பதுளை வீதியால் செல்வதாகக் கூறினார்கள். நாமும் அவ்வழியே திரும்பிச் சென்றோம்.

சட்: பதுளை வீதியால் திரும்பியதை நீர் காணவில்லை?- மக்கள் அவ்விடத்தில் கூடி நின்றதால் அவர்களைக் கேட்டோம்.

சட்: பதுளை ரோட், உன்னிச்சை ரோட் ஆகியவற்றிலும் மக்கள் நின்றார்கள்?- செங்கலடி பதுளைரோட் சந்தியில் சந்தை இருந்ததால் அவ்விடத்தில் மக்கள் அதிகமாக நின்றார்கள், ஆனால் ஏனைய இடங்களில் அப்படி நிற்கவில்லை.

உன்னிச்சை வீதியில் பியட் காரிலிருந்து முதலில் இறங்கியது யார்? -நால்வரும் இறங்கி ஓடியதைக் கண்டேன்.

சட்: பணப்பையுடன் இறங்கியவர் யார்? - காரின் இடது பின்புறமாக இறங்கியவர்

சட்: காரின் இருபுற கதவுகளாலும் இறங்கியவர்கள் காட்டினுள் ஒரே திசையில் ஓடினார்களா? இரு புறமாகவும் ஓடினார்களா?- இடதுபுறமிறங்கியவர்கள் காரைச்சுற்றி, அனைவரும் வீதியின் வலதுபுறமாக ஓடினார்கள் கையில் ஒருவர் சேலைப்பையுடன் ஓடினார்; ஆனால் எவர் என்பது தெரியாது.

சட்: நேற்று 2ம் எதிரி எனக் கூறினீர்?- ஆம்.

சட்: அது சரியா ஆம்- அவர் ஓடும்போது வீழ்ந்தார் அவரை நான் அடையாளங் கண்டேன்.

சட்: அவர் எத்தனையாவதாக ஓடினார்?- கடைசியாக

சட்: 2ம் எதிரியை பிடிக்க முயற்சித்தீரா? -இல்லை.

சட்: சேலைப்பையுடன் ஓடியவர் இவ் வழக்கில் முக்கியமானவர் எனக் கருதுகிறீரா?-ஆம்

சட்: அவரைப் பற்றி பொலிஸ் முறைப்பாட்டில் ஏதாவது கூறினீரா?- ஞாபகமில்லை.

சட்: ஞாபகமில்லை என்று இங்கு கூறவேண்டாம்.

சட்: நீர் ஒருவார்த்தைதானும் அவரைப்பற்றிக் கூறவில்லை என்கிறேன் நான்?

சட்: நீரும் இராமநாயக்காவும் எவ்வளவு தூரம் 1-ம் எதிரியைத் துரத்திச்சென்றீர்கள்? சுமார் ¼ மைல்.

சட்; அவர் ஓடும்போது உங்களை நோக்கி சுடுவதற்கு முயற்சித்தாரா?- இல்லை.

சட்: நீங்கள் பிடிக்கும் போது செடியினுள் நின்றாரா? இருந்தாரா? நின்றுகொண்டிருந்தார்

சட்: அப்போதும் அவர் சுடமுயற்சிக்கவில்லையா? அதற்கு முன்னரே தடியால் அடித்து துப்பாக்கியைப் பறித்துவிட்டேன்.

சட்; உங்களுக்கு வசதியாக தடி எப்படி வந்தது?- மரத்திலிருந்து வீழ்ந்துகிடந்தது.

சட்: எந்நேரத்திலாவது காலால் எதிரியை அடித்தீரா?- ஆம்.

சட்: வயிற்றிலும் அடித்தீர்களா?

அவரைப் பிடிக்கவேண்டியிருந்ததாலும் பயத்தாலும் அவரை கையாலும், காலாலும், பொல்லாலும் அடித்தேன் அவரைப் பிடித்தபோது கத்தியை அவர் நீட்டியபடி வைத்திருந்தார். அவர் அக்கத்தியை எங்கிருந்து எடுத்தார் என என்னால் கூறமுடியாது அவர் தனது கைக்கு

(5-ம் பக்கம் பார்க்க)

### மக்கள் கருத்து

## ஒலிபெருக்கித் தொல்லை

யாழ்ப்பாணத்தில் ஒலிபெருக்கியினால் மக்கள் அடையும் கஷ்டங்கள் அளவிடமுடியாதவை. யாழ் நகரில் எந்தவொரு மூலையில் ஒரு நிகழ்ச்சி நடந்தாலும் அவை யாழ் நகர் முழுவதற்கும் கேட்கத்தக்க வகையிலேயே ஒலிபெருக்கியை பாவிக்கின்றார்கள்; நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாதவர்கள் தங்களுடைய சௌகரியங்களை முன்விட்டே அவ்வாறாக நடந்து கொள்வர் எனவே அவர்களும் கேட்கத்தக்கதாகவே ஒலிபெருக்கியைப் பூட்டுவது அவர்களுக்கு அசௌகரியத்தையே ஏற்படுத்தும் அதுமட்டுமல்ல இவ்வாறு ஒலிபெருக்கி அலறுவதால் படித்துக்கொண்டிருக்கும் மாணவர்கள் தமது சிந்தையை படிப்பில் கவனம் செலுத்த முடியாதவர்களாகவே இருக்கின்றனர்.

தினமும் சுப்பிரமணியம் பூங்காவிலும் அடிக்கடி யாழ் திறந்தவெளியரங்கிலும் நடைபெறும் வைபவங்களில் ஒலிபெருக்கி பாவிக்கப்படுவதால் அப்பகுதியைச் சுற்றியுள்ள மக்கள் மிகுந்த இரமப்படவேண்டியுள்ளது அதுமட்டுமல்ல ஒலிபெருக்கி மூலம் அடிக்கடி மக்கள் ஒலியைக் கேட்பதால் சுகாதாரத்துக்கும் கேடுகள் பலவுண்டு காதுகேட்காமலும், கர்ப்பிணிகளாக இருக்கும்போது ஒலிபெருக்கிக்கு அண்மையிலிருந்து கேட்பதால் பிறக்கும் பிள்ளைகள் ஊமை முற்றவர்களாக பிறக்கவும் இப்படியான பல நிகழ்வுகள் நடப்பதாக பல ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்

எனவே மக்களின் நலனை முன்னிட்டு இனியாவது கூட்டங்களிலும் பூங்காவிலும் ஒலிபெருக்கி பாவிக்கும்போது அதன் ஒலி அங்கிருப்பவர்களுக்குமட்டுமே கேட்கக்கூடியதாகச் செய்யவேண்டும். இதற்கான முயற்சியில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தவேண்டும் தேநீர்க்கடைகளிலும் வானொலி இசைத்தட்டுக்கள் கடைக்குள் இருபவர்களுக்கு மட்டும் கேட்கக் கூடியதாக இருக்கவேண்டும்

எஸ். சங்கரப்பிள்ளை
முதலாம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்

# இந்துசமூகத்திலிருந்து சாதி, சீதனப்பிரச்னை அகலவேண்டும்"

## இந்துகலாசார அமைச்சருக்கு மகஜர்

(கொழும்பு)

"சைவத்துறையிலும், இந்து கலாசாரத்துறையிலும் நம் முன்னோர் எமக்களித்த செல்வங்களில் சமய சமூக கலாச்சாரக் குறைபாடுகளும் ஊழல்களும் மலிந்து கிடக்கின்றன, சாதிக் கொடுமை, சீதனக் கொடுமை, தீண்டாமை, உயிர்ப்பலி, பெண்ணடிமை ஆகிய சீர்கேடுகளை அகற்றி பகுத்தறிவுப்படி சைவத்தையும் இந்துக்கலாசாரத்தையும் சீர்செய்யவேண்டியது அவசியம்''

இவ்வாறு வடமாகாண அபிவிருத்திச்சபையினர் பிரதேச அபிவிருத்தி, இந்து கலாசார சைவசமய விவகார அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையை நேற்றுக்காலை அவரது அலுவலகத்தில் சந்தித்து நேரில் கையளித்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளனர்:

கடந்த மாதம் 10ம் திகதி வடமாகாணத்தின் அபிவிருத்தி குறித்து யோசனை தெரிவித்திருந்த வடமாகாண அபிவிருத்திச் சபையினர் சைவம், இந்து கலாச்சாரம் ஆகியவை பற்றி நேற்று யோசனை தெரிவித்தனர் வடமாகாண அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு என். கனகசூரியர் செயலாளர் திரு. கே. எஸ். மகேசன் உட்பட உறுப்பினர்கள் பலர் திரு இராசதுரையை சந்திக்கச் சென்றிருந்தனர்.

மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

### சாதிக் கொடுமை

இலங்கையில் உள்ள 23 லட்சத்திற்குமேற்பட்ட இந்துக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் தாழ்ந்த சாதியினர் என்று புறக்கணிக்கப்பட்டு, சமயாசாரம். கலாசாரம் ஆகியவற்றிற்குச் சமஉரிமை மறுக்கப்பட்டு சமூக வாழ்விலே தாழ்த்தப்பட்டு, பொருளாதாரத் துறையிலே பின்தள்ளப்பட்டுள்ளனர்.

ஆபிரிக்காவில் நடைபெறும் இன ஒதுக்கல் கொடுமையிலும் கொடுமையாக, இலங்கையில் தமிழர்களுக்குள்ளே சாதிக்கொடுமை இருந்து வருகின்றது

தமிழ் மக்களின் சமயகலாச்சாரக்குறைபாடுகளை அகற்றும்பொருட்டு கனகரத்தினம் ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் இந்து அறநிலைய மசோதா தயாரிக்கப்பட்டது. ஆனால் அது பாராளுமன்றத்துக்கு வரவில்லை. இந்த மசோதாவை ஆதாரமாகக் கொண்டு, இன்றைய சமூக, கலாச்சாரத் தேவைகளுக்கு ஏற்றவிதத்திலே, சீர்திருத்தங்கள் உண்டு பண்ணும் சட்டம் இயற்றி அதனைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துமாறு வேண்டுகின்றோம்.

### உயிர்ப்பலி

இன்றும் இந்துக்கோயில்களில் ஆடு, கோழி முதலிய உயிப்பலி, வெளியே பசுவதை ஆகிய துர் ஆசாரங்களும் சட்டப்படி நீக்கப்படல்வேண்டும்.

### சீதனக் கொடுமை

சீதனமுறை இன்றைய இந்துசமூகத்தில் பல்வேறு இன்னல்களை உண்டுபண்ணி வருகின்றது முன்னெப்போதும் இல்லாதவாறு வாழ்க்கைச் செலவு அதிகரித்துவரும் இக்காலத்திலே, பணச் சேமிப்பு என்பது பழங்கதையாகி வருகிறது இந்நிலையில், பெண்பிள்ளைகளுக்கு திருமணம் செய்துகொடுப்பதற்குச் சீதனம் வேண்டும் என்கின்ற நிபந்தனை மிகவும் கொடூரமானது. சட்டத்தினால் சீதனமுறையை ஒழிக்க முடியாவிட்டாலும், சீதனம் பெறாமல் திருமணம் செய்யும் வரன்களை ஊக்குவிக்குமுகத்தில், உத்தியோகம் உத்தியோக உயர்வு, உபகாரச் சம்பளம் படிப்பு, வெளிநாட்டுப் பயிற்சி என்பனவற்றில் முன்னுரிமை வழங்கும் அரசாங்க நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு வேண்டுகிறோம். சீதன வசதியற்ற - படித்த பெண்களுக்கு கட்டாயமாக தொழிற்பயிற்சி அளித்து அவர்களுக்கு உத்தியோகம் கொடுக்கும்படியும் வேண்டுகின்றோம். சீதன ஒழிப்பு விடயத்தில் தேசவழமைச் சட்டத்தில் சீதனமுறையை அங்கீகரிக்கும் விதிகள் நீக்கப்படல்வேண்டும்.

### ஆலயப்பிரவேசம்

இந்துக் கோயில்களில் மாநகரங்களில் உள்ள சில கோயில்களே சிறுபான்மை மக்களுக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது கிராமப்பகுதிகளில் உள்ள கோயில்களில் இன்னும் சாதிவேற்றுமை கடைப்பிடிக்கப்படுகின்றது. ஒருசிலஆலயங்களுக்குள் சிறுபான்மை மக்களை அனுமதித்தாலும், சமய ஆசாரப்படி ஒழுகும் சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு மறுக்கப்பட்டு வருகின்றன. சிவதீட்சை பெறுதல், தேவார திருவாசகங்களைப் படித்த, சமயக்கல்வி பெறுதல் சமயக்கிரியைகளை அன்றாட வாழ்வில் அனுட்டித்தல், புரோகிதம் செய்வித்தல் ஆகிய சந்தர்ப்பங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்னும் இல்லை தாழ்த்தப்பட்ட மக்கள் வணக்கத்துக்கு கூடும் இடங்களில் சைவ முன்னேற்ற ஸ்தாபனங்கள் சமயக் கல்வியும், சமயாசாரமும் போதிக்கும்படி ஊக்குவிக்கப்படல் வேண்டும். அதோடு தாழ்த்தப்பட்ட மக்களின் சமய வாழ்வுக்கென

(4-ம் பக்கம் பார்க்க)

# வீதி அமைப்பதில் முரண்பாடு: விவசாய மந்திரி ராஜினாமா!

பொன், ஜூன். 15 வீதி ஒன்று அமைப்பதற் கான பிரேரணை சம்பந்தமாக முரண்பாடு ஏற்பட்டதை யடுத்து ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் நோர்த் ரைன் வெஸ்ட்பேலிய விவசாய அமைச்சர் டைத்தர் டெனக்கே பதவி துறந்துள் ளார். இயற்கைவனப்பு நிறை ந்த, சுற்றாடல் அசுத்தத்தால் தீண்டப்படாத பசுமையான மலைகளும், காடுகளும் நீர்நிலை களும் புற்தரைகளும் ஒரு பிர தேசத்தின் ஊடாக புதிய போக்குவரத்துப்பாதை ஒன்று அமைப்பதற்கான பிரேரணை ஒன்றையடுத்தே இச்சர்ச்சை எழுந்தது.

இப்பிரேரணையை மாநில அரசு (டஸல்டோர்ப்) அங்கீ காரம் அளித்ததை அடுத்தே டெனக்கே தமது பத வியை இராஜினாமாச் செய்ய முடிவு செய்தார்

1980 டிசெம்பர் மாதமள வில் ஜெர்மன் சமஷ்டிக்குடியர சில் 4875 மைல் வாகனப் பாதைகளும், 20,625 மைல் பெருந்தெருக்களும் அமைக்கப் பட்டு பூர்த்தியாக்கப்படவுள் ளன. [இ]

# ஆயுள்வேதக் காங்கிரஸின் பொன்விழா இன்று

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சமஸ்தலங்கா ஆயுள்வேத காங்கிரஸின் 50வது ஆண்டு பூர்த்திவிழா இன்று சனிக்கிழமை கொழும் பில் நடைபெறவுள்ளது. இவ் விழாவின் காலை நிகழ்ச்சி களுக்கு பிரதமவிருந்தினராக பிரதமர் திரு. ஆர். பிரேம தாசாவும், மாலை நிகழ்ச்சி களுக்கு சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா வும் கலந்துகொள்கிறார்கள்.

மேற்படி விழாவில் கலந்து கொள்ளுமாறு வடஇலங்கை சித்தமருத்துவ சம்மேளனத் திற்கும் அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. வைத்திய சிரோமணிகள் எஸ். பி. ஏ. இன்னாசித்தம்பி, எம். எஸ். சுந்தரம் வைத்திய பிரதீபம் மூகாந்திரம் ஈ பீ இராஜையா, ஆகியோர் வடஇலங்கை சித்தமருத்துவ சம்மேளனத் தின் சார்பில் இவ்விழாவில் கலந்துகொள்வர்.

இவ்விழாவை ஒட்டிய "கீழைத்தேச மருத்துவக் கருத்தரங்கில்" சித்தவைத் தியத்தைப் பற்றியும் அதன் அபிவிருத்தி பற்றியும் ஆரா யப்படவுள்ளது. [கெ-இ]

## உரையரங்கு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் சமூக விஞ் ஞான கல்வி வட்டம் நடாத் தும் 'உரையரங்கு' நிகழ்ச்சி இன்றுமாலை ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

"முற்போக்கு இலக்கியம்— நேற்று இன்று" என்ற தலைப் பில் பேராசிரியர் க. கைலாச பதி உரையாற்றுவார். (கு)


# விவசாயிகளே!

- மிளகாய் - உருளைக்கிழங்கு
- வெங்காயம் - நெல்
- மரக்கறிவகை - பழவகை

ஆகிய எல்லாப்பயிர்களைப் பாதிக்கும், பூச்சிபுழுக்கள்-நோய்கள் களைகள் ஆகிய பீடைகளைக் கட்டுப்படுத்தவும், அழிக்கவும் எல்லாவித

கிருமிநாசினிகள்
பங்கசுகொல்லிகள்
களைக்கொல்லிகள்

எப்பொழுதும் சுலபமாகவும், கலப்பற்றும் எங்களிடம் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

பசளைவகைகளும் கிடைக்கும்.



உங்கள் விவசாய பிரச்சனைகள் எதுவானாலும் எங்கள் இலவச அறிவுரைகளுக்கு இன்றே நாடுங்கள்

AGROS

அக்ரோஸ் லிமிட்டெட்

56, கஸ்தூரியார்/குத்தபசேகரம் வீதி, யாழ்ப்பாணம்
(புதிய நிர்வாக அதிகாரி:- ஜெகந்சன்ஸ்-கொழும்பு)


# இன்றைய பலன்

ஆனிமாதம் 2-ம் திகதி

[சனிக்கிழமை]

(16-6-1979)

மேடம் : ஆத்திரப்படுவ தன் மூலம் அருமையான சந் தர்ப்பத்தை இழக்க நேரிடும், மேலிடத்துச் செல்வாக்கும் பாதிக்கப்படக்கூடும், அயல வர்களுடன் அன்பாக நட ந்து கொள்ளவும்.

இடபம் : வசதிகள் பெரு கும், வரவிலும் திருப்தி ஏற் படும், செல்வாக்குப் பெரு கும், வாக்குப் படைத்தவர் களின் ஆதரவு கிடைக்கும், ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த விடயமொ ன்று உங்களுக்கு சாதகமான முடிவு தரும்.

மிதுனம் : அறிவுத்தாகம் மேலோங்கி நிற்கும், ஆராய்ச் சிகளில் ஈடுபடுவீர்கள், விருந் தினர்கள் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும், எதிர் பாராத பணம் கைக்குக் கிடை க்கும்.

கடகம் : உறவாடிக் கெடுப்பதற்கு பகைவர்கள் வருவர் உற்சாகம் குன்றும், பிரயாணத்தின்போது பொ ருள் தவறக் கூடும், சிலருக்கு உஷ்ணரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

சிங்கம் : தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும், களஸ்திரவழியில் பொருள் வரவுக்கு இடமுண்டு, கண் ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள், புதிய நண்பர் கள் சேருவார்கள்,

கன்னி : தாமத குணத் தின்மூலம் தவறுகள் நடக்க லாம், வேண்டாத விவாதங்க ளால் வீண்பெயர் கேட்க நேரிடும், கலகச் செய்திக்கும் இடமுண்டு, நிதியில் நெருக் கடியும் தோன்றும்.

துலாம் : அறவழிகளை மனம் நாடும், வேதனை கொடு த்த சம்பவம் ஒன்று சமரச மாகத் தீர்க்கப்படலாம், சுற்றுவட்டாரத்தில் மதிப்பு உயரும், பயன்தரும் பிரயா ணமொன்றும் ஏற்படலாம்.

விருச்சிகம் : கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும், எதை யும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள், ஒவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும், சில ருக்கு இடமாற்றமும் ஏற்பட லாம், கலைஞர்களுக்கு நல்ல தினம்.

தனுசு : பொதுப் பணிக ளில் ஈடுபடுவீர்கள், குறிப் பாக அரசியல்வாதிகளுக்குப் புதிய ஆர்வம் பிறக்கலாம், சிலர் புண்ணியஸ்தல யாத்தி ரையை மேற்கொள்வதற் கும் இடமுண்டு.

மகரம் : வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும், சுற்றாடலில் உற்சாகமான வர வேற்புக் கிடைக்கும், அதிக வருவாய்க்கு இடமுண்டு, கலைஞர்களுக்குப் பொன்னான தினம்.

கும்பம் : இனிக்கப்பேசு வோர் விஷயத்தில் எச்சரிக் கையுடன் இருக்கவும், பிறந் தகத்தின் நினைவு திடீரெனத் தலைதூக்கும், கடமையில் சோர்வு தென்படும், மனத் திடம் வேண்டும்.

மீனம் : மனநிறைவுக்கு இடமுண்டு, மதிப்பும் உய ரும், அறவாற்றலால் அரச போகமும் கிடைக்கும், தொழி ல்புரியும் இடத்தில் திருப்தி நிலவும், சிலர் வாழ்க்கையில் இடமாற்றமும் ஏற்படலாம்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

# இந்து சமூகத்திலிருந்து...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசு மாதிரி இந்துக்கோயில் களைக் கட்டிக்கொடுத்தல் வேண்டும். அல்லது மாதிரி இந்துக்கோயில்கள் கட்டிக் கொடுக்க ஊக்குவிக்கவேண் டும்.

## பரதக்கலை

இந்து ஆலயங்கள் தமிழ் மக்களின் நுண்கலைகளை வளர்க் கும் கலைக்கூடங்கள், இயல் இசை நாடகம் ஆகிய முத்தமி ழும் கலாநிலையங்கள், இந்துக் கோயில்கள் ஆகும் இக்காலத் திலும் இந்துக்கோயில்களிலே சதிர்க்கச்சேரி முதலிய தூர் நட வடிக்கைகள் ஆங்காங்கு இடம் பெறுகின்றன. தேவாலயங் களிலே விலை மாதுக்களின் சதிர்க்கச்சேரிகளைச் சட்டப்படி தடைசெய்து, குலமாதுக்க ளின் பரதக்கலை நிகழ்ச்சிகளை அனுமதிக்கவேண்டும். தமிழ் மக்களின் ஆகவும் உயர்ந்த நுண்கலையான பரதக்கலையின் இன்றைய தோற்றத்தை அரங்க மண்டபங்களுக்கு சென்று பார்க்கும் வாய்ப்பு சமூகத்தில் அந்தஸ்துப் பெற்ற வர்களுக்கே இருந்து வருகின் றது. இந்த நிலைமாறி, பரதக்கலையை மக்கள் முன் எடுத்துச் சென்று அதனை உண் மையிலே மக்கள் கலையாக்க வேண்டும் என்றால், கோயில் உற்சவங்களில் குலமக ளிரின் அரங்கேற்றம், நாட்டியக்கச்சேரி ஆகியன நடைபெறவேண்டும். ஆகவே உற்சவங்களில் பரதநாட்டிய நிகழ்ச்சிகள் ஏற்பாடுசெய்யும் கோயில்களுக்கு அரசு பண உதவி அளித்தல்வேண்டும்.

பரதக்கலையின் வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுக்கவேண் டிய பொறுப்புத் தங்கள் அமைச்சின் இந்து கலாசாரப் பிரிவுக்குள்ளது. இலங்கையிலே சர்வதேச பரதநாட்டிய விழா ஒன்றுக்குத் தங்கள் அமைச்சு ஏற்பாடு செய்து, அதனைத் தொடர்ந்து ஆண்டுதோறும், உலகில் ஆங்காங்கே சர்வதேச பரதநாட்டிய விழாக்கள் நடைபெற்று பரதக்கலை பாரெங்கும் விளங்க வகை செய்தல் வேண்டும்.

## திரைப்படக்கலை

இந்து கலாசாரத்தின் மறு மலர்ச்சிக்குப் பரதக்கலையைப் போலவே, திரைப்படக்கலை உறுதுணையானது ஈழத்தில் திரைப்படக்கலை இன்றும் இளம்பராயத்திலேயே இருந்து வருகின்றது. இலங்கையில் இந்துக்களுக்கு இந்து கலா சாரத்தைப் பிரதிபலிக்கும் தமிழ்த்திரைப்படங்கள் பக்திச் சுவை தனிசொட்டச் சித்திரிக் கும் தமிழ்த்திரைப்படங்கள் இதுவரை தயாரிக்கப்பட வில்லை. இலங்கையிலுள்ள தமிழ்மக்களின் கலாசாரசுவை எப்படியிருத்தல் வேண்டும் என்பதை நிர்ணயிக்கும் பொறுப்பு இலங்கைத் திரைப் படக் கூட்டுத்தாபனத்திடமும் தணிக்கை சபையிடமும் விடப் பட்டுள்ளது. இச்சபைகள் தமிழ்த்திரைப்பட விவகாரத் தில் ஏதேச்சாதிகாரமான முறையிலும், மாற்றான்தாய் மனப்பான்மையோடும் நடத்து வருகின்றன. இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம், தணிக்கைசபை ஆகியவற் றில் இந்து கலாசாரத்தின் நலன்களைக் கவனிக்கும் தமிழ்ப் பிரதிநிதிகள் இடம்பெற வேண்டும்.

## இலங்கை-இந்திய கூட்டுத்தயாரிப்பு

இலங்கையில் தமிழ்த்திரைப் படக்கலைக்கு வயது வரும் வரைக்கும் இலங்கை-இந்தியக் கூட்டுத்தயாரிப்புக்களைக் கட் டுப்பாடின்றி ஊக்குவிக்குமாறு வேண்டுகின்றோம்.

## சாவகச்சேரியில் சினிமா ஸ்டுடியோ

இந்துக்கள் மிகப் பெரும் பான்மையினராக வாழும் வடமாகாணத்திலே, இயற்கை வனப்புள்ள ஓரிடத்திலே ஓர் அரச சினிமா ஸ்டுடியோ ஸ்தாபிப்பதற்கு ஏற்பாடு செய்துதருமாறும் வேண்டுகி றோம். வடபகுதியில் சினிமா ஸ்டுடியோ நிறுவுவதற்குரிய இடங்கள் அநேகம் இருக்கின்றன. சாவ கச்சேரித் தொகுதி சினிமா ஸ்டுடியோ அமைக்கச் சகல விதத்திலும் பொருத்தமா னது.

## இந்துப்பல்கலைக்கழகம்

இக்காலத்தின் தேவைகளுக் கேற்ப, இன்று இந்துப் பண் பாட்டைப் பிரதிபலிப்பதும் வளர்ப்பதுமான ஒரு இந்துப் பல்கலைக்கழகம் இல்லாத பெருங்குறை எமக்குண்டு. சேர். பொன். இராமநாதன் யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலி யில் நிறுவிய பரமேஸ்வரக் கல்லூரியே இந்துப்பல்கலைக் கழகத்திற்குச் சகலவிதத்திலும் பொருத்தமான இடமாகும். இப்பொழுது, அங்குள்ள இலங்கைப் பல்கலைக்கழகத் தின் யாழ்ப்பாண வளாகத்தை வடபகுதிக்குள்ளேவேறொரு இடத்திற்கு அகற்றிவிட்டு, காலம் தாழ்த்தாது இந்துப் பல்கலைக்கழகத்தை பரமேஸ் வரக்கல்லூரி வளவில் அமைத் துத் தருமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

## ஆறுமுகநாவலர் நினைவுச்சின்னம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்கு யாழ்ப்பாணத்திலும் நினைவுச் சின்னம் எடுப்பதற்குத்தங்களின் அமைச்சும் தங்களின் கீழ் உள்ள அதிகாரிகளும் எடுத்து வரும் துரிதமான முயற்சிகள் கண்டு உற்சாகப்படுகின்றோம். [ஓ]

# "அது எமது சங்கமல்ல"

[யாழ்ப்பாணம்]

இலங்கை தெங்கு பனம் பொருள் ஊழியர்சங்க பொதுச் செயலாளர் திரு வி ஜி தங்க வேல் பின்வருமாறு எழுது கிறார்.

"எமது தொழிற்சங்கத்தின் முழுமையான ஆதரவினைக்கட ந்த 11-6-79ம் திகதி வெளி வந்த தங்கள் பத்திரிகை மூலம் கறுப்புப்பட்டி, உண்ணாவிரதப் போராட்டங்களுக்கு நாம் தெரிவித்திருந்தோம். ஆனால் நேற்றைய பத்திரிகையில் எமது தொழிற்சங்கத்தின் பெயரை ஒத்த ஒரு தொழிற்சங்கத்தின் எதிர்ப்பு அறிக்கையினைப் பார் க்கக்கூடியதாக இருந்தது. எதி ர்ப்பு அறிக்கைவிட்ட தொழிற் சங்கம் ஒன்று இன்றுவரை எமக்கோ அல்லது யாருக்குமே தெரியாத ஒரு திடீர் தொழிற் சங்கமாகும் இதனால் எமது அங்கத்தவர்கள் உண்மை தெரி யாது திகிலும் ஆச்சரியமும் அடையக்கூடியதாக இருக்கும் என்பதுடன் திட்டமிட்டுக் கறுப்புப்பட்டி உண்ணாவிரதப் போராட்டத்திலிருந்து எமது சங்க அங்கத்தவர்களைப் பிரிப் பதற்கு எடுத்த முயற்சியெனக் கருதுகின்றோம். மேற்படி இய க்கத்தையும் போராட்டத்தை யும் எமது சங்கம் பூரணமாக ஆதரித்து நிற்கின்றது".

# சிவாவுக்கு வரவேற்பு

[யாழ்ப்பாணம்]

அமெரிக்க விஜயத்தை முடித் துக்கொண்டு தாயகம் திரும் பிய தமிழர் விடுதலைக் கூட் டணித் தலைவரும் நல்லூர் எம் பியுமான திரு மு சிவசித் தம்பரத்துக்கு நல்லூர் தொகுதி தமிழர்விடுதலைக் கூட்டணிக் கிளையினர் இன்று சனிக்கிழமை கோண்டாவிலில் வரவேற் பொன்றை அளிக்கின்றனர்.

இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு த தம்பித்துரை தலைமையில் நடைபெறவுள்ள இவ்வரவேற்புவிழாவில் எதிர்க் கட்சித் தலைவர் திரு அ அமிர் தலிங்கம் உட்பட கூட்டணி எம் பிக்களும் திருமதி அமிர் தலிங்கம் திரு சி நாகராசா, திரு ஆ துரைராசசிங்கம், சோலை மகேசன் உட்பட கூட்டணிப்பிரமுகர்கள் உரை யாற்றுவார்கள். [கு]

வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சக்கரவர்த்தி திருமகன்

நாகம்ஸ் (கன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - மாலினி
சபாஷ்மீனு
(புதிய பிரதி)

தினசரி 4 காட்சிகள்
ராஜா (யாழ். நகர்)
எம் ஜி.ஆர் - ஜெயலலிதா
சௌகார் ஜானகி நடித்த
ஒளிவிளக்கு
புதிய பிரதி ஈஸ்மன்கலர்

25-வது வாரம்
வின்சர் (கொழும்புத்துறை)
தினசரி 4 காட்சிகள்
10-10, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மென் கலர்)

3-வது ஜனத்திரள் வாரம்
நாளை நாளை என்று நாளைப் பின்போடாது
இன்றே கண்டு களிக்கத் தவருதீர்கள்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-15, 9-45
முத்துராமன் - தேவிகா, கல்யாணகுமார் நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
குறிப்பு: யாழ்நகரில் இதுவே கடைசித்தடவையாக காண்பிக்கப்படுகிறது.
(புதிய பிரதி)

A GRAND RELEASE!
SHANTHI JAFFNA Daily: 5 Shows
(Phone 7642) 10-30, 2-30, 4-45, 7-00, 9-30 P.M.
Peter Sellers, Christopher Plummer
in
"The Return Of The PINK PANTHER"
Cinemascope — Colour
Robbery—Suspence—Comedy & Karate Fight
Ran over 100 days in Colombo

REGAL Daily at 2-00 4-30, 7-00 & 9-30 p. m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a.m.
URSULA ANDRESS
in
Mountain In The Jungle
Color — Scope — Adults
சிறுவர்கள் வயதுவந்தவர்களுடன் வந்தால் அனுமதிக்கப்படுவர்.

கடைசி வாரம் தினசரி 4 காட்சிகள்
மனோகரா (யாழ்நகர்)
எம். ஜி. ஆர். - ராஜகுமாரி நடித்த
குலேபகாவலி
(புத்தம்புதிய பிரதி)

வெலிங்டன்
மயங்குகிருள் ஒரு மாது

ரியோ (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி—சாவித்திரி
அதிசயத்திருடன்

கடைசி 3 தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
ராணி (யாழ் நகர்)
சிவாஜி· பத்மினி
கோடீஸ்வரன்
(புதிய பிரதி)
19-6-79 முதல் எம். ஜி ஆர். நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்


# முன்காரில் சென்றவர்கள்......

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கவசம் எதுவும் அணிந்திருக்கவில்லை.

எனது உயிரைப் பாதுகாக்கவே நான் முனைந்தேன்

சட்: முதலாம் எதிரியை கொலைசெய்யவும் முயன்றீர்?- இல்லை கத்தியை இராமநாயக்காவும் பிஸ்டலை நானும் பொறுப்பெடுத்தோம். 2ம் எதிரி வீழ்ந்து கிடந்தபடியாலும் பின்னாலும் பொலிசார் வந்துகொண்டிருந்தபடியாலும் நாம் அவரை பிடிக்கமுயலவில்லை, அவர் வீழ்ந்துகிடந்த அருகில்தான் பணப்பை கிடந்தது. அவரது கையில் அது இருக்கவில்லை.

சட்: நீரோ அல்லது வேறு எவராவது பொலிசாரோ அப் பையை அவ்விடத்தில் போட்டிருக்கலாம்?- என்னால் அதைக் கூறமுடியாது.

சட்: சம்பவம் நடந்த இடத்திலிருந்து 6 மைல் தொலைவில் சில மணி நேரத்தின் பின்னர்தான் எதிரிகளைப் பிடித்தீர்கள்?- ஆம்.

இதன்பின்னர் சார்ஜன் ஹாசன் சாட்சியமளித்தார் அரசசட்டத்தரணி சாட்சியத்தை நெறிப்படுத்திய போது அவர் கூறியதாவது:

சம்பவதினம் ஏருவூ பொலிஸ்நிலையத்தில் கடமையாற்றினேன். நிலைய அதிபரிடமிருந்து எனக்கு சில பணிப்புக்கள் கிடைத்தன. ஏருவூர் மக்கள் வங்கி காசாளர் செங்கலடி கிராமிய வங்கிக்கு காசு கொண்டு செல்லும் வேளையில் கொள்ளை நடைபெறவிருப்பதாகவும், இரு பொலிசாரை சாதாரண உடையில், ஒருவரை அவர்களுக்கு முன்பாகவும், மற்றையவர் பின்புறமாகவும் செல்லும்படி ஒழுங்குசெய்யவும் அத்துடன் கார் ஒன்றில் ஆயுதங்களுடன் சார்ஜன் ரெட்றிக்கோ மற்றும் பொலிசாருடன் சாதாரணஉடையில் என்னை செல்லும்படியும் பொறுப்பதிகாரி கூறினார்.

நான் கான்ஸ்டபிள்கள் அபயரத்தின, இராமநாயக்க ஆகியோரை அழைத்து இப் பணிப்பை அவர்களுக்கு கொடுத்துவிட்டு வங்கிக்கு சென்று முகாமையாளரைச் சந்தித்தேன். காசாளர் வந்ததும் எனக்கு கடிதம் அனுப்பும்படி முகாமையாளரிடம் கூறினேன், பின்னர் வந்து பொலிஸ் உத்தியோகத்தர்களை ஆயத்தமாகும்படி செய்தேன், ஈ. என் 3229 இலக்க காரை நான் ஒழுங்கு செய்து பொலிஸ் நிலையத்தில் நிறுத்தினேன். எனது பாதுகாப்புக்காக ஓர் இயந்திரத் துப்பாக்கியையும் எடுத்துக்கொண்டேன் சார்ஜன் ரெட்றிக்கோவும் இயந்திரத் துப்பாக்கி ஒன்றுடன் ஆயத்தமானார். இவை 25 தடவை வெடிக்கக்கூடிய துப்பாக்கிகள் அறிவித்தல் வரும்வரை நாம் காத்திருந்தோம், பகல் 12-30 மணியளவில் வங்கி முகாமையாளரிடமிருந்து அறிவித்தல் வந்தது. (கடிதத்தை சாட்சி உறுதிப்படுத்தினார். வங்கிமுகாமையாளரின் பெயர் எனக்குத் தெரியாது. அவர் எனக்கு மட்டும் விளங்கத்தக்கவிதத்தில் அக் கடிதத்தை எழுதியிருந்தார்.

பின்னர் இரு கான்ஸ்டபிள்களையும் முகாமையாளரைச் சந்திக்கும்படி கூறினேன் பொலிஸ் நிலையத்திலிருந்து வங்கி சுமார் 25 யார் தொலைவில் உள்ளது.

பின்னர் மற்றைய பொலிசார் காரினுள் இருக்க, நான் வெளியில் அவதானித்தபடி நின்றேன். 12-30 மணியளவில் இராமநாயக்க முன்பாகவும் மற்றுமிருவர் சமாந்திரமாக அவருக்குப் பின்பாகவும் அபேரத்தின அவர்களுக்குப் பின்புறமாகவும் சைக்கிள்களில் சென்றுகொண்டிருந்தனர் திருமலை வீதியில் செங்கலடிப்பக்கம் அவர்கள் சென்றுகொண்டிருந்தனர்.

நான் சாரதியுடன் காரில் ஏறி புறப்பட ஆயத்தமானேன். சார்ஜன் ரெட்றிக்கோ கான்ஸ்டபிள் உபாலி ஆகியோரும் காரினுள் இருந்தனர். நாமும் செங்கலடிப் பக்கமாகச் சென்றோம் சாரதி பொலிஸைச் சேர்ந்தவரல்லர். நான் சாரதிக்கு அருகில் முன்புறமாகவும் பின் ஆசனத்தில் சாரதிக்குப் பின் ரெட்றிக்கோவும், எனக்குப் பின்னால் உபாலியும் இருந்தனர் இது ஓர் ஒஸ்ரின் கேம்பிரிட்ஜ்' கார்.

ரேட்டிலிருந்த வளைவை நாம் தாண்டியபோது சயிக்கிள் வீழ்ந்துகிடப்பதையும் மக்கள் கலவரமடைந்து ஓடுவதையும் கண்டேன் அந்த இடம் பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 1/4 மைல் தூரமிருக்கும். சுமார் 200 யார் தூரத்தில் நாம் இதனைக் கண்டோம் நான் வேகமாக 'ஹோர்ணை' அடித்தபடி செல்லும்படி சாரதியிடம் கூறினேன். நாம் கிட்ட வந்ததும் இராமநாயக்காவும், அபேரத்தினவும் முன்னே செல்லும் காரைத்தொடரும்படி எனக்கு சமிக்ஞை செய்தனர் 20 யார் தூரத்தில் முன்னால் ஒரு பியட்கார் செல்வதை நான் கண்டேன் அக்காரை நாம் தொடர்ந்தோம் 2 ஸ்ரீ 8665 இலக் கார் அது அக்காரை முந்திச்செல்லுமாறு எனது சாரதிக்கு கூறினேன் நாம் முந்த முனைந்த வேளையில் முன்னால் சென்றுகொண்டிருந்த கார் எம்மை முந்தவிடாது தடைசெய்தபடி சென்றுகொண்டிருந்தது பின்னர் முன்னால் சென்றுகொண்டிருந்த காரிலிருந்து வெடிச்சத்தம் ஒன்று கேட்டது வலது புறமாக அக் காரிலிருந்து றிவோல்வர் ஒன்று நீட்டப்பட்டது நான் எமது காரின் இடது ஜன்னலூடாக இயந்திர துப்பாக்கி மூலம் சுட்டேன் ரெட்றிக்கோவிடமும் காருக்கு சுடுமாறு கூறினேன் முன்னே கார் அங்குமிங்குமாக வீதியில் சென்றுகொண்டிருந்தது நாம் வெடிவைத்தபடியே பின்தொடர்ந்தோம் பதுளை வீதியில் செங்கலடி சந்தியைத் தாண்டி சென்றுகொண்டிருந்தோம் சுமார் 200 யார் தூரம்வரை —ஒரு பாலம்வரை நாம் இப்படி வெடித்தபடி தொடர்ந்தபோது எமது ரவை முடிந்துவிட்டதை அறிந்தோம் அப்போது பதுளைவீதியில் 3 1/2 மைல் சென்றபோது முன்னால் செல்லும் காரிலிருந்து இடதுபக்கமாக சில கடதாசிகளும் காசும் வீசப்பட்டன. பின்னர் கறுப்புநிற தோற்பை ஒன்றும் வீசப்பட்டது. பின் கரடியனாறு சந்தியில் இடது பக்கமாக உன்னிச்சை வீதியில் கார் திரும்பியது. செங்கலடி சந்தியிலிருந்து இச்சந்தி 7 1/2 மைல் தூரமிருக்கும் உன்னிச்சை வீதியில் சுமார் 1/2 மைல் சென்றபோது கறுப்பு நிற 404 கார் எமக்கு பின்னால் வருவதை கண்டோம், ஏ எஸ் பீ யின் காராக இருக்க வேண்டுமென்று நினைத்து அதை முந்திச்செல்ல இடம் விடுமாறு கூறினேன் அது எம்மை முந்தியபோது அது ஏ. எஸ். பீ. உடையதல்ல என்பதையும் சி ஐ டி. பொலிசாரின் கார் அது என்பதையும் அதனுள் கான்ஸ்டபிள் இருவர் இருப்பதையும் கண்டேன்.

பியட்கார்கரடியனாறு சந்தியிலிருந்து சுமார் 1 1/2 மைல் தூரத்தில் நின்றது. பின்னர் காரின் கதவுகள் திறக்க, இருபுறமாக இறங்கி ஓடினர் 404 காரும் அந்தக்காரின் பின் நிறுத்தப்பட்டு அதிலிருந்தவர்களும் இறங்கி ஓடினர் நாமும் எமது காரை நிறுத்தி. வலது புறமாக காட்டினுள் ஓடினோம்.

இன்ஸ்பெக்டர் தங்கவேலு எதிர்களை கலைத்து செல்வதைக் கண்டேன். எதிரி தாக்குப்பட்டுவிழ தங்கவேலு அவர் மீது பாய்ந்து இருவரும் இழுபறிப்பட்டனர் அவ்வேளை நான் இன்ஸ்பெக்டர் தங்கவேலுவுக்கு உதவினேன். சார்ஜன்ட ஒருவரும் அவ்விடம் வந்தார் நீலநிறப் பை ஒன்றை எதிரியின் அருகில் கிடந்து தங்கவேல் எடுத்தார். (பையை சாட்சி அடையாளம் காட்டினார்).

நானும் சி ஐ டி பொலிஸ் ஒருவரும் எதிரியைப் பிடிக்க இன்ஸ்பெக்டர் தங்கவேல் பையை விரித்துப்பார்த்தார். அதனுள் மண்ணிற கடதாசிப் பையினுள் காசுகள் இருந்தன. பிஜாமா சாரம் ஒன்றும் அதனுள் இருந்தது. பின், எதிரியையும் பொருள்களையும் காரணமையில் கொண்டுவந்து இன்ஸ்பெக்டர் பெரினுண்டோவிடம் பாரம் கொடுத்தோம்

2ம் எதிரியைப் பிடிக்க பலத்தைப்பாவிக்க நேர்ந்தது 10, 15 நிமிடத்தில்பின் மூலம் எதிரியை அபேரத்தின, இராமநாயக்க ஆகியோர் அவ்விடம் கொண்டுவந்தனர் சார்ஜனையும் உபாலியையும் அவ்விடத்தில் காவலுக்கு விட்டுவிட்டு பி. ப சுமார் 1-30 மணியளவில் பொலிஸ் நிலையம் திரும்பினோம் 2-30 மணியளவில் பொலிஸ் நிலையத்தை அடைந்தோம் அப்போது நிலைய அதிகாரி அங்கு இல்லை பின்னர்தான் வந்தார் பின் எதிரியைஏருவூர் வைத்திய அதிகாரியிடம் கொண்டுசென்றேன் இன்ஸ்பெக்டர் சில்லாவுக்கு நான் முறைப்பாடு கொடுத்தேன்.

பின்னர் 28-3-78இல் ஒரு லட்சத்து74 ஆயிரத்து100ரூபா காசாளர் திரு கணேசலிங்கத்திடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது அவரிடமிருந்து முறைப்பாட்டையும் பெற்றேன் 100 ரூபா நோட்டுக்களும் 50 ரூபா நோட்டுக்களுமாக அப்பணம் கொடுக்கப்பட்டது.

பின்னர் சாட்சியை சட்டத்தரணி திரு எம். சிவசிதம்பரம் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: திரு கணேசலிங்கத்திடம் கொடுத்த பணத்தில் 10 ரூபா, 5 ரூபாநோட்டுக்கள் இல்லை?- இல்லை

சட்: கணேசலிங்கம் இருந்ததாக கூறுவது அது தவறு?- ஆம்.

சட்: தங்கவேல், அபேரத்தின இராமநாயக்க ஆகிய மூவரும்காட்டினுள் ஓடுவதைப் பார்த்தீர்? ஆம்.

சட்: 2ம் எதிரி எத்திசையில் ஓடினார்? வலது பக்கமாக.

சட்: இன்ஸ்பெக்டர் தங்கவேலு அவரைத் தொடர்ந்தார்?- ஆம்.

சட்: 2ம் எதிரியைத் தாண்டி அபேரத்தின இராமநாயக்க செல்லவில்லை? இல்லை.

சட்: அவர்கள் வேறு ஒருவரின் பின் சென்றனர்?- ஆம்.

சட்: '2ம் எதிரியிடமிருந்து' என்று, எதிரியின் பக்கத்தில் கண்டெடுத்த பொருள்களைப்பற்றி நீர் கூறியிருக்கமாட்டீர்?- இல்லை.

சட்: அப்படி நீர் பொலிஸ் முறைப்பாட்டில் கூறினீரா?- ஞாபகமில்லை.

சட்: கொள்ளை நடந்த இடத்தில் நீர் எவரையும் அடையாளம் காணவில்லை?- இல்லை

சட்: கொள்ளையரைப் பிடிப்பதற்காக உமக்கு விடுக்கப்பட்ட பணிப்புகள் போதுமானவை எனக் கருதினீர்?- ஆம்.

சட்; காசுப்பையை பறிக்கவிடாமல் பாதுகாப்பதுடன், காலத்தை தாமதிக்கச்செய்யு

(6-ம் பக்கம் பார்க்க)


Rio Phone: 7607
(Jaffna) Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p m
Jungle Mistery

பெற்றோல் விலை ஏறிவிட்டதா?
அல்லது
பிரியமான சைக்கிள்
கிடைக்கவில்லையா?
அதனால் உரியவர்களைச்
சந்திக்கவில்லையே என்ற
கவலையை விடுங்கள்!
இதோ கணப்பொழுதில்
பறவுங்கள்.

ராம்சன்ஸ்
யாழ்ப்பாணம்
2768

# உலக கிண்ணக் கிரிக்கெட்:
## இன்று இலங்கை-இந்திய மோதல்

லண்டன், ஜுன், 15

உலக கிண்ண கிரிக்கட் போட்டியில் நாளை சனிக்கிழமை இலங்கை கோஷ்டி இந்திய கோஷ்டியுடன் மோதுகிறது.

ஏனைய ஆட்டங்களின் விபரம் வருமாறு:

மேற்கிந்தியா- நியூஸிலாந்து ஆஸ்திரேலியா- கனடா. இங்கிலாந்து- பாகிஸ்தான்.

கடந்த செவ்வாயும் புதனும் பலத்த மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட மேற்கிந்திய - இலங்கை ஆட்டம் ஓவல் மைதானம் ஈரமாக இருந்ததன் காரணமாக இன்று வியாழக்கிழமையும் நடைபெறவில்லை.

இதன் காரணமாக ஆட்டம் ரத்துச்செய்யப்பட்டு இரண்டு கோஷ்டிகளுக்கும் தலா 2 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன

தெரிவுசெய்ய வந்துவிட்டீர்களா?
இதோ குறைக்கப்பட்ட விலையில்
நினைக்கத் திகைக்கும் கலரில்
புதுப்பிக்கப்பட்ட HONDA 90 C.C.
மோட்டோர் பைசிக்கிள்களையும்
மற்றும் பொருட்களையும்
பார்வையிட
HONDA 90 C C.

ராம்சன்ஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
19, ஸ்ரான்லி வீதி.
தந்தி: ராம்சன்ஸ். போன்: 508

# சிவில் உடையில்
## வந்து தாக்கினார்களாம்
### மண்டைதீவிலிருந்து ஒரு புகார்

[யாழ்ப்பாணம்]

சிவில் உடையில்வந்த பொலிசார் இருவர் பொல்லாலும் துப்பாக்கியாலும் ஒருவரைத் தாக்கினார்களாம்.

மண்டைதீவு கிராம அபிவிருத்திச்சங்கச் செயலாளரால்யாழ் பொலிஸ் அதிபருக்குத் தந்தி மூலம் இச்செய்தி அனுப்பப்பட்டுள்ளது

இதுசம்பந்தமாக உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் இதுபோன்ற அசம்பாவிதங்கள் மேலும் நடைபெறாது கவனித்துக்கொள்ளுமாறும் தந்தியில் மேலும்வற்புறுத்தப்பட்டுள்ளது.

யாழ் உதவிப் பொலிஸ் அதிபர் திரு ஹேரத் இதுசம்பந்தமான விசாரணையை மேற்கொள்ளுவதற்கான உடனடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் [கொ]

## முன் காரில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ளையும் கான்ஸ்டபிள்களைப் பணித்தீர்?- ஆம்.

சட்: 2, 3 நிமிடத்தில் அவ்விடத்துக்கு செல்லக்கூடியதாக நின்றீர்?- ஆம். உடனடியாக செல்லமுடியாதபடி பஸ் ஒன்று வந்தது.

சட்: கார் ஒன்று கொள்ளை நடந்த இடத்தில் நிற்பதைக் கண்டீரா?- இல்லை.

சட்; சைக்கிள் விழ்ந்து கிடப்பதையும் மக்கள் ஓடுவதையுமே கண்டீர்?- ஆம்.

சட்: சைக்கிள் வீதியில் எப் பக்கம் கிடந்தது?- வலது பக்கமாக.

சட்: முதன்முதலாக பியட் காரை எப்போ கண்டீர்?- சைக்கிள் கிடந்த இடத்தில் இருந்து சுமார் 10 யார் தூரத்தில் அது போய்க்கொண்டிருந்தபோது.

சட்: சாந்தி ஹோட்டலுக்கு இப்பாலா? அப்பாலா? 25 யார் இப்பால் அக் காரைக் கண்டேன்.

சட்: நீர் பொலிஸ் முறைப்பாடு கொடுத்தநேரம் கார் ஏற்கனவே பொலிஸ்பாதுகாப்பில் இருந்தது?- ஆம்

சட்: காரை ஓடாது தடை செய்யத்தான் துப்பாக்கிகள், ரவைகளுடன் சென்றீர்?: ஆம்.

சட்: அதற்கு சுலபமான வழி டயருக்கு வெடிவைப்பதுதான்?- ஆம்; ஆனால் நான் காரை முந்திச் சென்று அதை மறிக்க நினைத்தேன், காரிலிருந்தவர் வெடித்தபின்னர்தான் நாம் வெடிவைத்தோம்.

சட்: முதல் தடவையாக நீங்கள் முயன்றபோது காரை முந்த முடியவில்லை?- ஆம்.

சட்: பின்னர் ஏன் வெடி வைக்கவில்லை? எமது ரவைகள் முடிந்துவிடுமென்பதிலும், காரினுள் இருப்பவருக்கு ஆபத்து ஏற்படக்கூடாது என்பதிலும் நாம் கவனமாக இருந்தோம்.

சட்: அத்துணை கவனமான நீர் ஒரு நிமிடத்திலேயே பின்னர் அனைத்து ரவைகளையும் தீர்த்திலர்?-

சட்: காரிலிருந்து ஒருவர் சுட்டதாக பொலிஸ் முறைப்பாட்டில் கூறினீரா? கூறியதாகவே நினைக்கிறேன்.

சட்: நீர் அப்படிக் கூறவில்லை.

நீதிபதி: அப்படிப் பதியப்படாவிடின் நீர் கூறவில்லை என்று ஏற்கிறீரா?- ஆம்.

விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (ம)

## "இளைஞரைக் கட்டுப்படுத்தும் பொலிசாருக்கு
# பரிசு வழங்கப்படுமென்று
# சுந்தரலிங்கம் அறிவித்தார்"
### சன்சோனி கமிஷன் முன் எஸ். பி.

[கொழும்பு]

"வடபகுதியில் பயங்கரச் செயல்களிலீடுபட்டுள்ள இளைஞர்களைக் கட்டுப்படுத்துபடியும் அவ்வாறு கட்டுப்படுத்துபவர்களுக்கு சிறந்த பரிசு வழங்கப்படும் என்று 1972ம் ஆண்டு ஜுன் மாதம் யாழ்ப்பாணத்திலுள்ளசகலபொலிஸ் நிலையங்களுக்கும் கொழும்பிலிருந்து டி ஐ ஜி திரு சுந்தரலிங்கத்தினால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் கூறப்பட்டது.

இவ்வாறு ஆகஸ்ட் கலவரத்தின்போது யாழ்ப்பாணம் எஸ் பி யாகக் கடமையாற்றிய திரு எஸ் வி செனவிரத்தின சன்சோனிக்கமிஷன் முன் இரண்டாவது நாள் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

இளைஞர்கள் கொலை, கொள்ளை, கைக்குண்டெறிதல் போன்ற வன்செயல்கள் சம்பந்தமாக கைதுசெய்யப்படும் போது பொதுமக்களிடமிருந்து தகவல் எதுவும் இல்லாததால் சந்தேகநபர்களாகவே கைதுசெய்யப்பட்டனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் விடுதலைசெய்யப்பட்டபோது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீடம் இவர்களுக்கு உற்சாகமாகவும் உணர்ச்சி யூட்டத்தக்கதாகவும் வரவேற்பளித்தனர்.

கலவரத்துக்கு முன்னரே யாழ்நகரில் பல வங்கிகள் கொள்ளையடிக்கப்பட்டன.

திரு அமிர்தலிங்கம் சாட்சியமளித்தபோது அவர் தாக்கப்பட்டது தொடர்பாக தான் முறைப்பாடு செய்யவந்தபோது நான் அவரது முறைப்பாட்டைக் கவனிக்காது மீன் வாங்கச்சென்றதாக தெரிவித்துள்ளார். அந்தநேரத்தில் நான் எனது கடமை முடித்து வீடு திரும்பிக்கொண்டிருந்தேன் அச்சமயத்தில் பொலிஸ்நிலையத்தில் உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டென், சப் இன்ஸ்பெக்டர் ஆகியோர் இருந்தனர், நானே சென்று அந்த முறைப்பாட்டை பதியுமளவிற்கு ஒருதேவை இருக்கவில்லை என்று கருதியதால் நான் உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டனிடம் முறைப்பாட்டைத் தெரிவிக்குமாறு கூறினேன்,

செம்மணி சூட்டுவழக்கில் சம்பந்தப்பட்ட கான்ஸ்டபிள் ஸ்டான்லி சட்டமாஅதிபரின் சிபார்சின் பேரில் விடுதலை செய்யப்பட்டபோது யாழ் பொலிசார் ஊர்வலம் ஒன்றை நடத்தினர் என்பதை மறுக்கிறேன்.

திரு அமிர்தலிங்கம் தான் வன்செயல்கள் நடைபெறும் இடத்தைப் பார்க்க விரும்பியதாகத் தெரிவித்தபோது அது உசிதமானதல்ல என்று நான் தெரிவித்தேன், அப்போது அவர் உணர்ச்சிவசப்பட்டவராக ஆத்திரத்துடன் "நீரும் உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டனும் வேலைநீக்கம் செய்யப்படவேண்டும்" என்றார் என்றுட அவர் தெரிவித்தார். [கு]

## பிரியாவிடை

[யாழ்ப்பாணம்]

தேசிய அரசாங்க சுகாதார சேவை தொழிலாளர் சங்க நீண்டகால பிரதிநிதியாகவும், செட்டிகுளம் அரசினர் வைத்தியசாலையில் கடமைபுரிந்து இளைப்பாறும் திரு த க. சந்தைக்காவுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை, செட்டிகுளம் அரசினர் வைத்திய சாலையில் பிரியாவிடை வைபவம் நடைபெறவுள்ளது. [கெ]

## ஆஸ்பத்திரிக்குள் கார் விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரிக்குள் கார் ஒன்று விபத்துக்குள்ளாகியது.

ஆஸ்பத்திரிக்குள் நிறுத்தியிருந்த காரொன்று புறப்பட்டபோது பழைய வெளி நோயாளர்பகுதிவாசலிலுள்ள சுவருடன் பயங்கரமாக மோதியதால் கார் பலத்த சேதத்துக்குள்ளாகியது.

பொலிசார் விபத்துக் குறித்து விசாரணையை மேற்கொண்டனர். (கெ-இ)

## வருடாந்த உற்சவம்

[புலோலி]

பருத்தித்துறை புலோலி பசுபதீஸ்வரர் கோவில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

# தஞ்சை - நாகையில் நாளை தேர்தல்
## எம். ஜி. ஆர்.-கருணாநிதி-இந்திராவின் பிரசாரங்கள் முடிவுற்றன

சென்னை ஜுன் 15

தஞ்சாவூர், நாகபட்டினம் இடைத்தேர்தல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.

காலை 8 மணி முதல் 4 மணி வரை வாக்களிப்பு நடைபெறும்.

முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி முன்னாள் சபாநாயகர் திரு. தில்லான் அமைச்சர்கள் திருவாளர்கள் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், மா. இராமச்சந்திரன்சந் தமிழக முதல்வர் திரு எம் ஜி ராமச்சந்திரன், தி மு க தலைவர் திரு மு கருணாநிதி ஆகியோரின் தலைமையிலான தேர்தல் பிரசாரங்கள் இன்று மாலை நான்கு மணியுடன் முடிவுற்றன.

### தஞ்சையில்

தஞ்சாவூரில் திரு அன்பில் தர்மலிங்கம் [தி மு க] திரு இங்காரவேடிவேலு [அ இ அ தி மு க] ஆகியோருடன் 10 சுயேட்சை வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

### நாகையில்

நாகபட்டினம் இடைத்தேர்தலில் திரு கே முருகையன் [இந்தியக் கம்யூ] திரு எம் மகாலிங்கம் [அ இ அ தி மு க] ஆகியோருடன் 8 சுயேச்சை அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். [இ]

## சகோதரத்துவக் கழகம்

[யாழ்ப்பாணம்]

கைதடி சகோதரத்துவக் கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று மாலை சைவச் சிறுவர் இல்லத்தில் திரு. ப. செல்லத்துரை தலைமையில் நடைபெறுகிறது.

பருத்தித்துறை நீதிபதி திரு க. ஞானச்சந்திரன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

## புதருக்குள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

நிலையத் தருகிறோம் என்று எதிரிகள் கூறியதாக நான் பொலிஸில் கூறவில்லை, பொலிசாரே கேள்விகளைக் கேட்டு பதிலையும் எழுதிக் கொண்டார்கள் என்றார். பொலிசாருக்கு இரண்டு தடவைகள் வாக்குமூலம் அளித்திருப்பதாகவும் கூறினார். (ம)

## சாதிப் பாகுபாடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

சாதிப்பாகுபாடு காண்பிக்கப்படும் கோவில்களுக்கும் பொது இடங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கும் மாணவர்களைக் கொண்டுசெல்லக் கூடாது, அதேபோல பாகுபாடுள்ள இடங்களுக்கு சிரமதானங்களின் பொருட்டும் மாணவர்களைக் கொண்டுசெல்லக்கூடாது என்றும் அச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [கு-இ]

## றிமாண்ட்!

[யாழ்ப்பாணம்]

வடபகுதி வன்செயல்கள் சம்பந்தமாகச் சந்தேகத்தின் பேரில் சமீபத்தில் கைது செய்யப்பட்ட நான்கு பேரில் இரண்டு பேர் நீதிவான்முன் ஒப்புதல் வாக்குமூலமளிக்கச் சம்மதம் தெரிவித்திருந்தனராயினும் கடைசி நேரத்தில் ஒப்புதல் வாக்குமூலமளிக்க மறுத்ததால் இருவரும் 18-ந் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

## மேயரிடம் முறையீடு

[யாழ்ப்பாணம்]

சாதி அமைப்பு முறைக்கெதிராக நேற்று நடைபெற்ற கறுப்புப்பட்டி, கறுப்புக்கொடி இயக்கத்தின் போது யாழ் நகர வீதிகள் சிலவற்றில் சட்டவிரோதமானமுறையில் வீதிகளுக்குக் குறுக்கே கட்டப்பட்டிருந்த கொடிகள் சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிசார் யாழ் நகர மேயருக்கு எழுத்து மூலம் சுட்டிக் காட்டியிருந்தனர்.

ஆயினும் நேற்று மாலையிலும் அக்கொடிகள் வீதிகளின் குறுக்கே காட்சியளித்துக்கொண்டிருந்தன, உள்ளூராட்சி மன்றக் கட்டிடங்கள் பார்லிமெண்ட் உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் இல்லங்களிலும் கறுப்புக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன, மாணவ மாணவிகளும் கறுப்புப் பட்டியணிந்திருந்தனர்.

## 'சிவா' இன்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணி எம் பிக்களும், யாழ் மாநகரசபை உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் வரவேற்பர். பின்னர் அவர் கூட்டணி தலைமைக் காரியாலயத்திற்கு செல்வார். காரியாலயத்தில் நடைபெறும் வரவேற்பு முடிந்ததும் நல்லூர்த் தொகுதி கூட்டணிக் கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கோண்டாவில் வரவேற்புக் கூட்டத்தில் கலந்து கொள்வார்.

அமெரிக்க மஸாச்சு செட்ஸ் பாராளுமன்றத்தினதும் அங்குள்ள தமிழ் மக்களினதும் அழைப்பை ஏற்று அமெரிக்கா சென்றிருந்த திரு வசிதம்பரம் அமெரிக்காவில் வாஷிங்டன், நியூயோர்க், மஸாச்சு செட்ஸ், கலிபோர்னியா ஆகிய நகரங்களுக்கும் நாடு திரும்பும் வழியில் லண்டனுக்கும் சென்றிருந்தார். [கு]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்க அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜுன் மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49. Telegram: Eelanaadu!
T e, 289.